மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

**அசல் வழக்கு எண். 60/2021**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44 வது பிரிவு 5 ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.கலைச்செல்வி, கிரேடு III என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : தியாகராஜன் (பி.வா.சா.1) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

03.07.2025

<u>**வாதி தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி –**</u>

1. எனது மனைவி நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால் வரவில்லை. நானும் எனது மனைவியும் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.61/21 வழக்கில் பிராது விபரத்தினை யார் சொன்னார்கள் என்றால் நான் தான் சொன்னேன். தாவா சொத்தினை நான் அயல்நாட்டிலிருந்து வேலை பார்த்து சம்பாதித்த பணத்தினை எனது மனைவிக்கு அனுப்பி வாங்கியதாக கூறப்பட்டுள்ளதற்கு வங்கி ஆவணங்கள் ஏதேனும் கைவசம் வைத்துள்ளேனா என்றால் தெரியவில்லை.

2. பிராது பாரா 6 ல் பவானியம்மாள் மற்றும் 4 ம் பிரதிவாதி ஆகியோர் பவானி அம்மாளுக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்தினை 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்திருப்பதாகவும் அந்த கிரையத்திற்கு சம்மதம் தரும் வகையில் 2 ம் வாதி ஒரு சம்மத பத்திரம் எழுதி தரவேண்டும் என்று வேண்டுகோள் வைத்தார் என்று கூறியிருப்பதில் அவ்வாறு பவானிஅம்மாள் 2, 3 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்த பத்திரமான 31.05.2011 ம் தேதியிட்ட பத்திரத்தை தான் நான் இந்த வழக்கில் பிவாசாஆ 2 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

3. பிவாசாஆ 2 பத்திரத்தின் மூலம் பவானி அம்மாள் 2, 3 பிரதிவாதிகளுக்கு புல எண் 131/3 செண்ட் 86 நிலத்தினை விற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. புல எண் 131/3 ல் 86 செண்ட் நிலமுள்ள ஹரிஜன காலணி நிலத்திற்கு கிழக்கு, இலுப்பையூர் விவசாய கூட்டுறவு சிக்கன நாணயத்திற்கு பாத்தியப்பட்ட நிலத்திற்கு மேற்கு, சுப்பிரமணிய சேர்வை நிலத்திற்கு தெற்கு, கமுதி ரோட்டிற்குட வடக்கு இதற்குள்பட்ட இடத்தை தான் வாசாஆ 1 ஆவணம் மூலமாக எனது மனைவி பவானி அம்மாளிடம் வாங்கினார்கள் என்றால் ஆமாம்.

4. மேற்படி பவானி அம்மாளுக்கு அதே சொத்தை பொறுத்து 15 வருடம் கழித்து 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுப்பதற்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்றால் சரிதான். ஒரு சொத்தை ஒரு முறை கிரையம் செய்து கொடுத்த பின்னர் அதே சொத்தை வேறு நபருக்கு கிரையம் கொடுத்தால் முதலில் கொடுத்த கிரையம் சட்டப்படி செல்லும் என்றால் சரிதான். பவானி அம்மாள் 31.05.2011ம் தேதி கிரையம் கொடுத்துள்ளார் என்றாலும் மறுபடியும் 30.06.2011ம் தேதி எதற்காக ஒரே மாதத்தில் 2, 3 பிரதிவாதிகளுக்கு எதற்காக கிரையம் கொடுத்துள்ளார் என்றால் பவானிஅம்மாளுக்கு ஆண் வாரிசுஇல்லாமல் மூத்த பெண் வாரிசு என்னுடைய மனைவி என்பதால் சம்மத பத்திரம் என்ற பெயரில் 2, 3 , 4 பிரதிவாதிகள் கேட்டுக் கொண்டதில் எனது மனைவி 30.06.2011ம் தேதி பிவாசாஆ 4 ஆவணத்தை எழுதிக் கொடுத்தார்.

5. இந்த வழக்கில் 4ம் பிரதிவாதி கலைச்செல்வன் பவானி அம்மாளின் மகன் ஆவார். பிவாசாஆ 2 ஆவணத்தில் 2வது லக்க சொத்தானது தனக்கு பூர்விக பாத்தியம் என்று பவானி அம்மாள் சொல்லி உள்ளார் என்றால் சரிதான். பூர்விக சொத்தை கிரையம் கொடுக்கும்போது தனது மகளிடம் மட்டும் எதற்காக சம்மத பத்திரம் கேட்டுள்ளார் என்றால் பெண் வாரிசு சொத்து என்பதால் எனது மனைவியிடம் சம்மத பத்திரம் கேட்டுள்ளார். தாவா சொத்து ஆதியில் பவானிஅம்மாளுக்கு பாத்தியம் என்றால் சரிதான்.

6. பவானி அம்மாளுக்கு தாவா சொத்து 10.04.1963ம் தேதியிட்ட திருச்சுழி சார்பதிவக எண் 268/1963 மூலம் பாத்தியம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராமலட்சுமி அம்மாள் கிரையம் வாங்கிய பிவாசாஆ 1 ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. எனது மனைவி பெயரில் தாவா சொத்தை கிரையம் வாங்கும்போது பவானி அம்மாளுக்கு எவ்வாறு பாத்தியம் என்பதை தெரிந்து கொண்டு வாங்கினோமா என்றால் பவானி அம்மாள் அப்பா சொத்து என்று தெரிந்து வாங்கினோம். பவானி அம்மாள் எனது மாமியார் என்றால் சரிதான். ராமலட்சுமி அம்மாளுக்கு தாயார் என்றால் சரிதான்.

7. வாசாஆ 1 மற்றும் பிவாசாஆ 1 ஆகிய இரண்டுமே பவானி அம்மாளின் தனிப்பட்ட சொத்து என்பதால் 4ம் பிரதிவாதி சம்மதமோ, அவரது மகள் 2ம் வாதி சம்மதமோ தேவையில்லை என்றால் அது அவருடைய தந்தை சொத்து. பிராது சொத்தை தான் பவானி அம்மாள் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். பிராதில்

குறிப்பிட்டுள்ள சொத்தை தான் ராமலட்சுமிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ராமலட்சுமி அம்மாள் இந்த வழக்கின் சொத்தைதான் 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளாரா என்றால் சரிதான். அதை சம்மத பத்திரம் என்று நினைத்துதான் கொடுத்தார். 2, 3 பிரதிவாதிகள் வழக்கின் வாதி கருப்பையாவுக்கு கிரையம் கொடுத்ததும் பிராது சொத்தை தான் என்றால் எட்டப்பனை கேட்டால் தெரியவரும். எட்டப்பன் உயிரோடு உள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. சின்னசாமி இறந்துவிட்டார் என்றால் சரிதான். பிவாசாஆ 4 கிரைய பத்திரத்தில் எனது மனைவி ராமலட்சுமி கிரையம் பெற்ற முன்பத்திரமாக வாசாஆ 1, பிவாசாஆ 1 ஆகிய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தை தான் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் இல்லை.

8. 4ம் பிரதிவாதி கலைச்செல்வன் சம்மத பத்திரம் எழுதி கொடுத்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. 30.05.2011ம் தேதியிட்ட பிவாசாஆ 2 பத்திரமே இந்த வழக்கிற்காக மோசடியாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி பத்திரத்தில் தாவா சொத்தின் விஸ்தீரணமும், சர்வே எண்ணும் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிவாசாஆ 2 பத்திரத்தில் உள்ள சொத்து பவானி அம்மாளுக்கு பூர்விக சொத்து என்றால் சரியல்ல. பிவாசாஆ 2 ஆவணத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மற்றொரு மோசடியான ஆவணம் பிவாசாஆ 4 என்றால் சரியல்ல. பிவாசாஆ 4 ஆவணத்திலும் தாவா சொத்தின் விஸ்தீரணமும், சர்வே எண்ணும் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

9. பிவாசாஆ 2, பிவாசாஆ 4 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நான்குமாலுக்குள்பட்ட சொத்து எனக்கோ, எனது மனைவிக்கோ, பவானி அம்மாளுக்கோ பாத்தியம் என்பதனை காட்ட ஏதாவது ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி விபரம் பவானி அம்மாள் மற்றும் எட்டப்பனை கேட்டால் தெரியும். எனது மனைவி விசாரித்தால் தெரியவருமா என்றால் தெரியும். பவானி அம்மாள் உயிரோடு உள்ளாரா என்றால் படுக்கையில் இறக்கும் தருவாயில் உள்ளார். பிவாசாஆ 4 பத்திரத்தில் ராமலட்சுமி தரப்பினராக உள்ளதால் அந்த பத்திரத்தை ரத்து செய்ய பரிகாரம் கோராமல் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

10. பிவாசாஆ 2, பிவாசாஆ 4 பத்திரத்தில் கண்ட நான்குமாலுக்குள்பட்ட சொத்துக்கள் அவர்களது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தா என்றால் பவானி அம்மாளை கேட்டால் தான் தெரியும். 2011ம் வருடம் பிவாசாஆ 2ன் மூலம் பவானி அம்மாள் கிரையம் கொடுத்த விபரமோ, பிவாசாஆ 4ன் மூலம் ராமலட்சுமி அம்மாள் கிரையம் கொடுத்த விபரமோ எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது மனைவியை இந்த வழக்கில் விசாரிக்க போகிறேனா என்றால் இல்லை. பிவாசாஆ 4 ஆவணத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்று சொல்வதால் மேற்படி பத்திரத்தில் உள்ள நான்குமாலை படித்து பார்த்து எனது மனைவி கையொப்பம் செய்துள்ளாரா அல்லது படித்து பார்க்காமல் கையொப்பம் செய்தாரா என்ற விபரம் எனது மனைவி சொல்லி தெரியும்.

11. தாவா சொத்தின் ஒரு பகுதியில் பி.எஸ்.என்.எல் நிறுவனத்திற்கு டவர் அமைப்பதற்கு குத்தகை ஒப்பந்தம் பிவாசாஆ 5 ஆக எழுதி கொடுத்தது எனது மனைவி என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்திற்கு வடக்கே எங்களுக்கு பாத்தியமான சொத்து புல எண் 131/6 உள்ளது. புல எண்.131/6 ல் தான் எனது மனைவி 1ம் பிரதிவாதிக்கு டவர் அமைப்பதற்காக குத்தகை பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. புல எண். 131/3 ல் தான் எழுதி கொடுத்துள்ளார். பிவாசாஆ 5 ல் தாவா சொத்தினுடைய நான்குமால்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாவா இடத்தை பார்வையிட்டு மேற்படி இடத்தின் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். அப்போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை.

12. நான் சவூதி அரேபியாவில் இருந்து 2022ல் இந்தியாவிற்கு வந்தேன். நீதிமன்ற ஆணையர் அறிக்கை , வரைபடத்தில் தாவா சொத்து முழுவதும் அதாவது bsnl tower அமைக்கப்பட்டுள்ள இடம் உள்ளிட்ட அனைத்தும் வாதிக்கு பாத்தியமான புல எண்.131/3 ல் வருவதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. பிவாசாஆ 6 ஆவணமாக சின்னசாமியும், எட்டப்பனும் வாதி கருப்பையாவிற்கு எழுதி கொடுத்ததாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கே உள்ள புல எண். 131/4 ஐ நாங்கள் சுப்பிமணியன் சேர்வையிடமிருந்து அவரது பவர் ஏஜெண்டான லெட்சுண தேவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளோம். பிவாசாஆ 1 ஆவணத்தில் உள்ள

நான்குமால், விஸ்தீரணம், சர்வே எண் மற்றும் பிவாசாஆ 6 ஆவணத்தில் உள்ள நான்குமால், விஸ்தீரணம், சர்வே எண் ஒன்றுதான் என்றால் சரிதான்.

13.பிவாசாஆ 1 ஆவணத்தின் மூலமாக ராமலட்சுமி அம்மாள் கிரையம் வாங்கிய சொத்தை ராமலட்சுமி அம்மாள் பிவாசாஆ 4 ன் மூலம் சின்னசாமி, எட்டப்பனுக்கு கிரையம் கொடுத்து பிவாசாஆ 6 ன் மூலம் சின்னசாமி, எட்டப்பனும் வாதி கருப்பையாவிற்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. பிவாசாஆ 4 கிரைய பத்திரத்தில் உள்ள நான்குமால் தவறாக போடப்பட்டுள்ளதை சாதகமாக எடுத்துக்கொண்டு தாவா சொத்தில் வாதியின் பாத்தியத்தை ஆட்சேபிக்கிறோம் என்றால் சரியல்ல. BSNL Tower ஐ இந்த வழக்கிற்கு பின்னர் முழுவதுமாக அகற்றிவிட்டு சிறிய **Antenna** உள்ளது என்றால் சரியல்ல பெரிய கோபுரம் உள்ளது. BSNL நிறுவனம் வாடகை பணத்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியும். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இடைக்கால மனு தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு வாதி BSNL டவர் அமைக்கப்பட்ட இடத்தை தவிர மீதமுள்ள 2 மாடி வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். வழக்கிற்கு பின்னர் கட்டியுள்ளார்.

14. 30.06.2011ம் வருடம் பிவாசாஆ 4 கிரையப் பத்திரம் 4ம் பிரதிவாதி கலைச்செல்வம் சாட்சி கையொப்பம் செய்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. 30.06.2011ம் வருடம் கிரையப் பத்திரத்தின் அடிப்படையில் ஏற்பட்ட, வாதி 2, 3 பிரதிவாதிகளிடம் இருந்து கிரையம் பெற்ற வாசாஆ 3 ஆவணத்தை ரத்து செய்ய பரிகாரம் கேட்காமல் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்து 2ம் வாதி ராமலட்சுமிக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்தினை ராமலட்சுமியிடமிருந்து சின்னசாமி மற்றும் எட்டப்பன் ஆகியோர் கிரையம் பெற்று அவர்களிடம் இருந்து வாதி சரியான பிரதி பிரயோஜனத்திற்கு கிரையம் பெற்றுள்ளதால் வாதி கருப்பையா பெற்ற கிரையம் சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல. எனது மனைவியின் எண்ணமும் விருப்பமும் தாவா சொத்தை கிரையம் கொடுப்பதுதான் என்றால் சரியல்ல. என்னுடைய சம்பாத்தியத்தால் தான் பெற்றது. வாதி கிரையம் பெற்ற பிறகு தாவா சொத்திற்கு பட்டா மாற்றி தொடர்ந்து வாதி கருப்பையாவின் அனுபவத்தில் இருந்த வருகிறது என்றால் எனக்கு தெரியாது. பிராது தேதியில் தாவா சொத்தில்

அனுபவத்தில் இல்லாதபோது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல.

15. எனது மனைவிக்கு பாத்தியமான சொத்தை பொறுத்து நான் விளம்புகை பரிகாரம் கொடுப்பதற்கு சட்டப்படி வழிஇல்லை என்றால் எனக்கு தெரியாது. நான் பணம் கொடுத்து பெயர் ராசிக்காக எனது மனைவியின் பெயரில் தாவா சொத்து வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பினாமி ஒழிப்பு சட்டத்தின் கீழ் எனது வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு பாத்தியம் என்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். எனது பெயரில் 227ம் பட்டாவில் சேதுபுரம் கிராமத்தில் உள்ள 4 ஏக்கர் 91 செண்ட் எனது மனைவி சுரேந்தர் என்பவருக்கு வாசாஆ14 கிரையப்பத்திரம் மூலமாக கிரையம் கொடுத்துள்ளார் என்றால் எனது சம்மதத்தின்பேரில் கிரையம் கொடுத்துள்ளார். எனது பெயரில் பட்டா உள்ளபோது எனது மனைவி எவ்வாறு பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் எனக்கு பூர்விக சொத்து என்பதால் எனது மனைவி, எனது மகன் சேர்ந்து எழுதி கொடுத்துள்ளார்கள். வாசாஆ14 கிரையப் பத்திரத்தை எனது மகன் எழுதி கொடுக்கவில்லை என்றால் கொடுக்கவில்லை வேறு பத்திரத்தில் எழுதி கொடுத்துள்ளார். வாசாஆ14 பத்திரத்தில் பணப்பற்று விபரத்தில் எனது பெயருக்கு முன்பு லேட் என்று எழுதப்பட்டு அது அழிக்கப்பட்டுள்ளதற்கான காரணம் என்னவென்றால் எனக்கு தெரியாது. லெ.தியாகராஜன் என்று கையொப்பம் போடுவேன். வாசாஆ14 பத்திரத்தை எனது மனைவி நான் இறந்துவிட்டதாக ஏமாற்றி பத்திர பதிவு செய்துள்ளார் என்றும் பின்னர் பிரச்சனை ஏற்பட்டதும் லேட் என்பது அழிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட பிற சொத்துக்களை வாசாஆ14ன் மூலமாக எனது மனைவி விற்கும்போது சம்மதம் தெரிவித்த நான் தற்போது வாதி கருப்பையாவிற்கு விற்பனை செய்த தாவா சொத்தினை பொறுத்து மட்டும் ஏன் பிரச்சனை செய்கிறேன் என்றால் நாங்கள் விற்கவில்லை. தாவா சொத்திற்குரிய பாத்திய ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யாமல் நான் கோரிய 1வது பரிகாரம் நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள இடைக்கால உறுத்துக்கட்டளை மனு தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர் வாதி கருப்பையா வாழ்வாதரத்திற்காக கட்டப்பட்டுள்ள வீடு தொடர்பான செயலுறுத்துக்கட்டளை கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

16. தாவா சொத்து வாதி கருப்பையாவிற்குதான் பாத்தியம் BSNL டவர் அமைக்கப்பட்ட இடத்தை எனது மனைவி நிர்வில்லங்கமாக சுவாதீனம் ஒப்படைப்பதற்கு கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த வித பாத்தியமும் அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. ஆகையால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கை தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை –

இல்லை.